பாடம் 11

# மீண்டும் வீட்டிற்கே!

***உன்னை மிகவும் நேசிக்கும் எவரேனும் வீட்டிலிருந்து தூரமாகச் சென்றுவிட்டதுண்டா? அந்த நபர் மீண்டும் வீட்டிற்கு வந்து உன்னைப் பார்த்தால், உனக்கு எப்படியிருக்கும்? வெகு காலத்திற்கு முன்னர் அன்பான தந்தையை விட்டுத் தூரமாகச் சென்ற ஒரு மகன் மீண்டும் வீட்டிற்கே திரும்பியதைப்பற்றிப் பார்ப்போமா?***

இது, இயேசு சொன்ன ஒரு கதையாகும். மிகவும் பணக்கார ஒரு அப்பாவுக்கு இரண்டு ஆண் பிள்ளைகள் இருந்தனர். அந்த அப்பா மிகவும் அன்பான வர். அவருடைய வீட்டிலே வேலையாட்கள் ஏராளமா னோர் இருந்தனர்.

இளைய மகன் சொத்தில் தனது பங்கைப் பிரித்துத் தருமாறு அப்பாவிடம் கேட்டான். பலமுறை பல நாட் கள் இப்படிக் கேட்டு வேதனைப் படுத்திக்கொண்டே இருந்தான்.

பலமுறை மகனுக்கு நல்ல புத்தி சொல்லியும், கெஞ்சிப் பார்த்தும் கொஞ்சிப் பார்த்தும் அந்த இளைய மகன் தன் விருப்பத்தை மாற்றவில்லை.

அப்பாவின் கண்களில் கண்ணீர் வழிந்தோடியது. ஆனால், இளையமகனின் மனமோ இளகவில்லை.

கடைசியாக வேறு வழி யின்றி,வேதனையோடு விருப் பமே இல்லாமலே அப்பா தன் சொத்திலே, இளையவனுக்கு வேண்டிய அனைத்தையும் கொடுத்தார்.

மிகவும் மகிழ்ச்சியாக தன் பங்காகக் கிடைத்தவற்றைப் பணமாகச் சேர்த்துக்கொண்டு தூரதேசத்திற்குச் சென்றான். நல்ல சிந்தையும், ஒழுக்கமும், பண்பும் இல்லாத ஆகாத நண்பர்களின் தூண்டுதலே இளையவன் அப்பாவைப் பிரிய காரணமாயின.

இளைய மகன் தூர தேசத் திலே மிகமிக உல்லாசமாக வாழ்ந்தான். தன் நண்பர்களும்



## மனன வசனம்

**என் மகன் மரித்தான்; மீண்டும் உயிர்த்தான். காணாமற்போனான். மீண்டும் கண்டெடுக்கப்பட்டான். லூக்கா 15:24.**

தானும் விரும்பியதெல்லாம் வாங்கினான். அதிகமாகச் செலவழித்தான். ஒருநாள் அவனிடம் ஒரு பணமும் இல்லை. அவன் யாரை நம்பி ஓடிவந்தானோ அந்த நண்பர் கள் யாவரும் அவனை விட்டு ஓடிவிட்டனர்.

என்ன செய்வதன்று தெரிய வில்லை. மிகவும் அழுதான். பசி அவனை வாட்டியது. வேலைதேடிச் சென்றான்.

பன்றிகளை மேய்க்கும் வேலைதான் கிடைத்தது. இளைய மகன் பசியின் மிகுதி யால், பன்றிக்கு உணவாக வழங்கப்பட்டிருந்த தவிட்டைச் சாப்பிட்டு தனது பசியைப் போக்கிக்கொள்ள விரும்பி னான். அதைக் கண்ட பன்றியின் சொந்தக்காரன்



அவனை வேலையை விட்டுத் துரத்தினான்.

மிகுந்த சோர்வோடும் வேதனையோடும் இருந்த இளையமகனுக்கு திடீரெனப் புத்திதெளிந்தது. அப்போதுதான் அவன் சிந்தனை செய்தான். ‘என் அப்பாவின் வீட்டிலே வேலையாட்கள்கூட எத்தனைச் சிறப்பாய் வாழ்கிறார்கள். என் தந்தையிடம் சென்று, நான் மன்னிப்புக் கேட்டு, மகனாக அல்ல ஒரு வேலையாளாக வைத்துக்கொள்ளுங்கள் எனக் கெஞ்சுவேன்’ என்று மனதில் சொல்லிக்கொண்டு அப்பாவின் வீட்டை நோக்கிச் சென்றான்.

தன் மகன் வருவதை தூரத் திலே பார்த்துவிட்ட அப்பா ஓடிச்சென்று மகனை அரவணைத்துக் கொண்டார்.

வேலையாட்களும் ஓடி வந் தனர். அப்பா தனது வேலை யாட்களிடம், “என் மகனை அழைத்துச்சென்று நீராட்டி உயர்ந்த ஆடைகளை அணியுங் கள். வாசனைத் தைலமிடுங்கள். கை விரல்களுக்கு மோதிரம் அணி யுங்கள். வீட்டிலே இன்னிசைக் கச்சேரி வையுங்கள். நல்ல ஒரு சுவை

## செய்தி

**தேவனுடைய குடும்பத்தினர் எப்போதுமே ஒருவர்மேல் ஒருவர் அக்கறைகாட்டுவார்கள்.**

யான விருந்துக்கு ஏற்பாடு செய்யுங்கள். என் மகன் காணாமற்போனான். திரும்பவும் கண்டு பிடிக்கப்பட்டான். மீண்டும் உயிர்த்தெழுந்தான்'' என்று ஆனந்தக் கூத்தாடினார்.

ஆனால் அந்த மகனோ, ‘‘அப்பா உங்கள் மகன் என்று சொல்ல எனக்குத் தகுதி இல்லை; தேவனுக்கும் உங்களுக்கும் விரோதமாக நான் பாவம் செய்தேன். என்னை மன்னித்து உங்கள் வேலையாட்களில் ஒருவனாக வைத்துக் கொள்ளும்'' என்று கெஞ்சினான்.

ஆனால், அன்பான அந்தத் தந்தை, மகன் திரும்பி வந்த சந்தோஷத்தில் இருந்தார்.

அன்பே, நாமும் நம் அன்பு தேவனை விட்டுப் பிரியாது, நம் உயிரினும் மேலாகப் போற்றுவோமா?

***செய்முறை:*** **அப்பாவைப் பிரிந்து இளைய மகன் தூரதேசம் சென்றான். யாவையும் இழந்து, இப்போது மீண்டும் தன் அப்பாவிடமே திரும்புகிறான். அவன் தன் வீட்டைக் கண்டுபிடிக்க உதவு.**



**புதிர் 11**